புதுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி.S.N.சியாமளா.,

உத்தரவு

ந.க.எண். 80/2024/எப்1 நாள் :19.03.2024

பொருள்	மனைப்பிரிவு – புதுக்கோட்டை நகராட்சி – புதுக்கோட்டை வடக்கு கிராமம் சர்வே எண். 101/4B, 0.70 ஏக்கர் (2850.ச.மீ) பரப்பளவு இடத்திற்கு 16 மனைகள் கொண்ட மனைப்பிரிவு அங்கீகரித்து உத்தரவிடுதல் – தொடர்பாக.
பார்வை	1. உறுப்பினர் செயலர் புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் /நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் புதுக்கோட்டை அவர்களின் கடித ந.க.எண்.1633/2023/புமா., நாள்:28/12/2023. 2. நகர்மன்ற தீர்மானம் எண். 615, நாள்:05.03.2024. 3. மனுதாரர் திரு.S.ஜாகிர் உசேன் உரிமையாளர், அவர்களது விண்ணப்பம் 29.12.2023

******

உத்தரவு :

பார்வை 1ல் கண்டுள்ள செயல்முறை உத்தரவில் புதுக்கோட்டை நகராட்சி புதுக்கோட்டை வடக்கு கிராமம் சர்வே எண்.101/4B,இடத்தில் 0.70 ஏக்கர் (2850.ச.மீ) பரப்பளவு இடத்திற்கு உறுப்பினர் செயலர்/துணை இயக்குநர் புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம், புதுக்கோட்டை அவர்களால் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/உ.செ.(பு.கூ.உ.தி.கு) எண்:129/2023 என தொழில் நுட்ப அனுமதியும், திட்ட அனுமதி எண்.23/2023 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் அடங்கிய சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை நகராட்சிக்கு மனுதாரரால் தானமாக தானப்பத்திரம் எண் 8770/2023 நாள்23.12.2023ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சிக்கு மனைப்பிரிவு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநரது இணைய வழி சேவை வழியாக (S.R.No.109/CP/23-24/0026528)விண்ணப்பித்து நகராட்சிக்கு செலுத்தவேண்டிய உரிய கட்டணங்கள் ரூ.46,250/. மனைப்பிரிவு சாலை பராமரிப்பு வைப்புத் தொகை கட்டணம் ரூ.1,00,000/. மற்றும் அரசுக்கு செலுத்தவேண்டிய நிலையன்பாடு மாற்று கட்டணம் ரூ.3,22,400/. செலுத்தியுள்ளார்கள்.

பார்வை 1ல் கண்ட உறுப்பினர் செயலர் / துணை இயக்குநர் நகர் ஊரமைப்புத் துறை புதுக்கோட்டை அவர்களின் உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஆணையாளர்
புதுக்கோட்டை நகராட்சி

19/3/2024

இணைப்பு : மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

பெறுநர் : திரு. S. ஜாகிர் உசேன்
எண் 7/63, சந்தைபேட்டை
திருமயம் அஞ்சல் / தாலுகா
புதுக்கோட்டை மாவட்டம்

நகல் : நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை
நகல் : இணை சார்பதிவாளர், புதுக்கோட்டை.
நகல் : நகராட்சி பொறியாளர், புதுக்கோட்டை நகராட்சி
நகல் : வருவாய் அலுவலர், புதுக்கோட்டை நகராட்சி
நகல் : துப்புரவு அலுவலர், புதுக்கோட்டை நகராட்சி